ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2108/63 - 2019 පෙබරවාරි මස 01 වැනි සිකුරාදා - 2019.02.01
***2108/63 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2019 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல : 4-3/6/2018/எச்டபிள்யூ/62.
பிர.செ.குறிப்பு இல.: 3/1/86(அ)/2018.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019.01.28.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், ரிதீகம.

2. **காணியின் விபரம்**: வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவில், 530, தொடம்கஹ கொடுவ மற்றும் 531, கொஸ்வத்த கிராம அலுவலர் பிரிவில், தொடம்கஹ கொடுவ, கொஸ்வத்த ஆகிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபதி சார்பாக மாத்தளை மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் 2018.05.23 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற் சுவட்டு இல. கேயு/ஆர்டீஜி/2018/252 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் பின்வரும் எல்லைகளினாலும் விஸ்தீரணங்களினாலும் விபரிக்கப் பட்டுள்ளது:

1. **துண்டு இல. 1 - தனிபாகொடுவ - விஸ்தீரணம் : 0.0670 ஹெக்டயார்.**
வடக்கு : எஸ். டீ. டபிள்யூ. எச். எம். ஆர். என். சூரியரத்ன உரிமை கோரும் தனிபாகொடுவே எல; கிழக்கு : டபிள்யூ. எம். பெரேரா உரிமைகோரும் தனிபாகொடுவ; தெற்கு : துண்டு இல 2; மேற்கு : எஸ். டீ. டபிள்யூ. எச். எம். ஆர். என். சூரியரத்ன உரிமை கோரும் தனிபாகொடுவே எல.

2. **துண்டு இல. 2 - தனிபாகொடுவ - விஸ்தீரணம் : 0.0083 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு இல 1; கிழக்கு : டபிள்யூ. எம். பெரேரா உரிமைகோரும் தனிபாகொடுவ; தெற்கு : பிரதேச சபை பாதை; மேற்கு : எஸ். டீ. டபிள்யூ. எச். எம். ஆர். என். சூரியரத்ன உரிமை கோரும் தனிபாகொடுவே எல.

3. **துண்டு இல. 3 - கொன்காவெலலந்த - விஸ்தீரணம் : 0.0044 ஹெக்டயார்**
வடக்கு : பிரதேச சபை பாதை; கிழக்கு : பீ. எம். அப்புஹாமி உரிமைகோரும் தனிபாகொடுவ; தெற்கு : பீ. எம். அப்புஹாமி உரிமைகோரும் தனிபாகொடுவ; மேற்கு : எச்.எச்.ஏ.எஸ்.பீ. கே. குணவர்தன உரிமை கோரும் கொன்காலந்தேவத்த, கொன்காலந்தேகால், கொன்காலந்தே ஹேன மற்றும் பிரதேச சபை பாதை.

**4. துண்டு இல. 4 - ஹதுபிடியேஹேன - விஸ்தீரணம் : 0.0185 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல 5; கிழக்கு : பாதை; தெற்கு : துண்டு இல 5; மேற்கு : துண்டு இல 5.

**5. துண்டு இல. 5 - ஹதுபிடியேஹேன - விஸ்தீரணம் : 0.0721 ஹெக்டயார்.**

வடக்கு : துண்டு இல 6; கிழக்கு : பாதை மற்றும் துண்டு இல 4; தெற்கு: பிரதேச சபை பாதை; மேற்கு : ஏ. எம். சோமாவதி உரிமை கோரும் கொன்காலந்தேஹேன.

**6. துண்டு இல. 6 - ஹதுபிடியேஹேன - விஸ்தீரணம் : 0.0775 ஹெக்டயார்.**

வடக்கு : எஸ். டீ. டபிள்யூ. எச். எம். ஆர். என். சூரியரத்ன உரிமை கோரும் கொன்காலந்தேஹேன மற்றும் பாதை; கிழக்கு : பாதை மற்றும் துண்டு இல 5; தெற்கு : துண்டு இல 5; மேற்கு : ஏ. எம். சோமாவதி உரிமை கோரும் கொன்காலந்தேஹேன.

*02-558*